ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

29.01.2026

1. கந்தனே வேலனே கருணைக்கடலே
காண்பவர்க்கு உன் நாமசெபத்தை
சிந்தையில் ஏற்றும் அன்பர்கட்கு
சித்தி முக்தி சர்வமும் அருளுகின்ற

2. அருளுகின்ற அப்பனே உமை போற்றி
ஆறுமுக அரங்கமகா ஞானியும்
குருவார அருளாசியாக ஆசிதன்னை
குறைவிலா விசுவாவசு கலை திங்கள்

3. திங்களில் சூலவாம் குருவார ஆசி
தொண்டர்களும் கலிவாழ் மக்களும்
ஓங்கார ஞானம்பெற உரைப்பேன்
ஓங்கார குடில் நோக்கி மக்கள் வந்து

4. வந்துமே அரங்கனென் பீடத்தில்
வணங்கி வேண்டல் வைக்க
செந்தூரானும் அரங்கன் யானும்
சோதிவழி காட்சிதனை தந்து

5. தந்துமே காரிய வெற்றிக்கு
தக்க அனுகூலம் தருவோம்
எந்த உயிர்க்கும் தீங்குதரா வண்ணம்
இனிதே அரங்கன் வகுத்தநல்

6. வகுத்தநல் சுத்த சைவநெறி ஏற்று
வழுவாக வாழ்வில் கடைப்பிடித்து
தகுந்தநல் ஞானிகள் பூசையிலும்
தவராஜன் யான் வழங்கும் அன்னதான

7. அன்னதான வழிகளை ஏற்று
அனுதினமும் பூசை செய்வதுடன்
அன்னதானப் பணிகளில் ஈடுபாடு
அணுக்கத் தொண்டராக சரணாகதி கொண்டு

8. கொண்டுமே பொருளுதவி செய்தும்
குருராஜன் என் தருமம் வளர்க்க
உண்டான வினைகள் விலகி
உயர்விலா கோளிடரும் விலகி

9. விலகி சர்வ பாதுகாப்புடன்
விடாமல் தொடரும் தொண்டால்
ஞாலமதில் ஞானிகள் ஆசியும்
ஞானபண்டிதனுடன் அரங்கனென் ஆசியும்

10. ஆசியும் கூடி ஞானவாழ்வை
அடைவதுடன் பிறவி இனி காணா
வாசி வசமும் பெரும் பேற்றையும்
வணங்கி வருபவரெல்லாம் அடைவர்

11. அடையவே அரங்கன் என் வழி
அளவிலா ஞானவான் படைகள்
தடையிலா கலியினில் பெருகி
தரணியே ஞானலோகம் ஆவது உறுதி
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி